# பொங்கல் ஒரு வரலாற்றுப் பின்னணி

**By**

**மாணிக்கராஜ், க.**

*இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு மகளிர் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ்ர்களின் அடையாளமாகத் திகழும் பொங்கல் பண்டிகை தை முதல் தேதியில் கொண்டாடப்படுகிறது. இயற்கைக்கும் உழைக்கும் மாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதனை நோக்கமாக்க் கொண்டு முதல் நாள் போகி பண்டிகையாகத் தொடங்கி பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என் நான்கு நாட்கள் சிறப்பாகத் தமிழர்கள் கொண்டாடுகின்றனர். அதேப் போல் ஆண்டு தோறும் மாசி மாதம் பூரம் நட்சத்திரம் அன்று கேரள மக்கள் திருவனந்தபுரத்திலுள்ள ஆற்றுகால் பகவதி அம்மனுக்குப் ''பொங்காலா'' என்னும் பெயரில் பொங்கலிட்டு வழிபாடு செய்கின்றனர். அதனை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *பொங்காலா, புதியீடு, உத்தராயண காலம், தீவக சாந்தி, நேர்ச்சி*

## முன்னுரை

மனிதனின் இயல்பு வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு செயல்பாடுகளுக்கும் ஒரு விழாவை உருவாக்கினான். அவ்வாறு உருவாக்கின விழாக்களுள் ஒன்று தான் தமிழர்கள் தேசிய விழாவாகக் கொண்டாடும் பொங்கல் விழா. உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும் தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் வகையில் பொங்கல் விழாவைக் கொண்டாடுகின்றனர். பொங்கல் திருநாளாக மட்டுமல்லாமல் கோவில் திருவிழாக்களின் போதும் தெய்வங்களுக்கு பொங்கலிட்டு வழிபாடு செய்கின்றனர். திராவிடர்களின் மூலப்படிவ குறியீடுகளில் ஒன்றுதான் பொங்கலிடுதல். பொங்கல் என்ற சொல்லை தமிழர்கள் ''பொங்கல்'' என்றும் கேரள மக்கள் ''பொங்கால'' என்றும் கூறுகின்றனர். இந்த வகையில் கேரளாவில் மிகவும் பிரசித்திப் பெற்று விளங்கும் ஆற்றுகால் தேவி கோவில் பொங்காலாவின் வரலாற்றுப் பின்னணியை இக்கட்டுரை ஆராய்கிறது.

## பொங்கலின் தோற்றம்

பொங்கல் பண்டிகையின் தோற்றம் எப்போது என்று உறுதியாகத் தெரியவில்லை. 1000 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றம் பெற்றது என்ற ஒரு கூற்று உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இது கொண்டாடப்படுகிறது என்று இன்னொரு கூற்றும் உள்ளது. சோழர் காலத்தில் பொங்கல் பண்டிகைக்கு ''புதியீடு'' என்ற பெயர் இருந்தது. அதாவது ஆண்டின் முதல் அறுவடை என்று அதற்குப் பொருள். உழவர்கள் தை மாதத்தின் முதல் நாளில் அந்த ஆண்டின் முதல் அறுவடையை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது. இதுதான் பின்னர் பொங்கல் பண்டிகையாகத் தோற்றம் பெற்றது எனலாம்.

## இந்திர விழா

பழந்தமிழகத்தில் கொண்டாடப்பட்ட விழாக்களுள் ஒன்று இந்திர இவ்விழா. இந்திரனைச் சிறப்பிக்கும் வகையில் விழா கொண்டாடப்படுகிறது. பசி, பிணி, பகை முதலியவற்றால் மக்கள் துன்பம் அடையாது இருத்தல் பொருட்டுத் தெய்வத்தைக் கருதிச் செய்யும் சாந்திப் பெருவிழாவே இந்திர விழாவாகும். இவ்விழாவைத் ''தீவகச் சாந்தி

செய்தரு நன்னாள்" என்று சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் கூறுகின்றார்.

சூரிய பகவான் தை மாதத்திலிருந்து ஆனி மாதம் வரை ஆறு மாதங்களுக்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பயணம் செய்யும் காலத்தை உத்தராயண காலம் என்று கூறுவர். இந்த உத்தராயண காலத்தின் தொடக்கத்தைஆதிகாலத்தில் இந்திரவிழாவாகக் கொண்டாடியிருக்கிறார்கள். அதுதான் இன்றைய பொங்கல் விழா. இந்திர விழா 28 நாட்கள் கொண்டாடப்பட்டது. இந்த விழாவின் முக்கிய அம்சம் கரும்பு வில். இந்திரனின் கரும்பு வில்லை நினைவு கூரும் விதமாக பொங்கல் பண்டிகையில் கரும்பு பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. உத்தராயண காலத்தின் தொடக்க நாட்களைப் போகிப் பண்டிகை, பொங்கல் பண்டிகை, உழவர் திருநாள் (மாட்டுப் பொங்கல்) எனக் கொண்டாடுகின்றனர். தற்போது காணும் பொங்கலும் கடைசி நாள் விழாவாக இணைந்துள்ளது.

**போகிப்பண்டிகை**

போகிப்பண்டிகை மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடப்படுகிறது. "போக்கி" என்பதுதான் மருவி "போகி" என்றாகிவிட்டது. அசுத்தங்களைப் போக்கி சுத்தத்தை வரவேற்பது. அதாவது அசுத்தம் என்பது வீட்டில் மட்டுமல்லாது நமது மனதில் உள்ள அசுத்தங்களைப் போக்குவது, துயரங்கள், துன்பங்கள். கவலைகளைப் போக்குவது என்று பொருள். வீடுகளுக்கு புது வர்ணம் பூசி வாசலில் மாவிலைக் கட்டி, வீட்டின் வாசலில் மாக்கோலம் மற்றும் பெயிண்டுகளால் கோலமிட்டும், அழகுபடுத்தி வீட்டில் பூஜைகள் செய்து இறைவனை வழிபடுவர். வழிபாட்டின் போது போளி, வடை, பாயாசம் போன்ற உணவு வகைகள் இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படும்.

**பொங்கல் பண்டிகை**

சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படும் பண்டிகை பொங்கல். பொங்கும் மங்கலம் எங்கும் தங்கிட தமிழகத்தில் அனைவரும் தை மாதம் 1 -ம் தேதி (ஜனவரி மாதம் 14-ம் தேதி பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். வீட்டில் சூரியன் ரதத்தில் வருவது போல் கோலமிட்டு, மாவிலை தோரணங்கள் கட்டி வீட்டை அலங்கரிப்பார்கள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது ஆன்றோர் வாக்கு. தை திருநாளில் இது வரை இருந்து வந்த துன்பங்கள் நீங்கி நல்வழி பிறக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த பண்டிகைச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பொங்கல் தினத்தன்று அடுப்பில் பொங்கல் பானை வைக்கப்பட்டு அதற்கு பொட்டிட்டு அதில் பால் ஊற்றி பால் பொங்கி வந்ததும் குடும்பத்தினர் அனைவரும் பொங்கலோ பொங்கல் எனக் கூறி பொங்கலை வரவேற்பர். முன் காலத்தில் பொங்கலுக்கு மண்பானையைப் பயன்படுத்தினர். அதன் பின் வெண்கலத்தால் செய்யப்பட்ட பானையை உபயோகப் படுத்தினர். இப்போது பல இடங்களில் குக்கரே பயன்படுத்தப்படுகிறது.

**மாட்டுப் பொங்கல்**

உழவர்கள் ஆண்டு முழுவதும் தங்களுக்காக உழைத்த மாடுகளுக்கு நன்றி தெரிவித்து அவற்றைக் கும்பிட்டு பூஜை செய்யும் நாளை மாட்டுப் பொங்கல் என்று கொண்டாடுகின்றனர். மாட்டுப் பொங்கல் அன்று வீட்டிலுள்ள பசு, காளை மாடுகளை குளிப்பாட்டி கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி அவற்றிற்கு மாலையிட்டு, மஞ்சள், குங்குமம் இட்டு மாடுகளுக்குப் பூஜை செய்வர்.

**காணும் பொங்கல்**

தமிழகத்தில் பல பகுதிகளில் "காணு" என்ற பெயரில் பொங்கலின் இறுதி நாள் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக பிராமணர் வீடுகளில் இப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. பெண்கள் தங்களது சகோதரர்கள் நலமுடன் இருக்க வேண்டும் என்பதற்காக இறைவனை வேண்டும் நாளாக காணும் பொங்கல் கொண்டாடப்படுகிறது. பொங்கல் திருநாளாக மட்டுமல்லாமல் கோவில்களிலும் குறிப்பாகப் பெண் தெய்வங்களுக்குப் பொங்கலிட்டு பூஜை

செய்யும் வழக்கம் உள்ளது. தற்போது ஆண்தெய்வங்களுக்கும் பொங்கலிட்டு பூஜை செய்கின்றனர். கேரளத்திலும் பல கோவில்களிலும் “பொங்கால” என்ற பெயரில் வழிபாடு நடந்து வருகிறது.

**பொங்கால் வழிபாட்டின் தோற்றம்**

இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்கின்ற மக்கள் மிகுந்த இறை நம்பிக்கை உடையவர்களாகக் காணப்பட்டான். தங்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களையும் நோய்களையும் தெய்வங்களின் சீற்றத்தால் வருகின்றவை என்று நம்பினான். நம்பிக்கையின் அடிப்படையில் தெய்வங்களுக்குப் பூசை செய்து வழிபடுவதனை முதல் கடமையாகக் கருதினர். வாழ்க்கையில் தீயவை நெருங்கி விடாது நல்லவை நடக்க வேண்டுமென்று மனிதன் தெய்வத்திடம் வேண்டவே வழிபாடு உருவானது. சிக்மண்ட் ப்ராய்டு என்ற உளவியல் அறிஞர் வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்ச்சியிலிருந்து உண்டாகியிருப்பதாகக் கருதுகிறார். இதன் பின்னரே மக்கள் வழிபட ஓர் இடத்தைத் தேர்வு செய்தனர். இறைவனை வழிபட குறியீடுகளையும் தேர்வு செய்துள்ளனர். குறியீடுகளாக மரம் செடி, கொடி, பறவை, விலங்கு போன்றவற்றைப் பயன்படுத்தினர்.

**நேர்த்திக்கடன்**

நேர்த்திக்கடன் என்ற சொல்லில் “நேர்” என்ற சொல் அடிச்சொல்லாக அமைகின்றது. இதனை நேர்தல, நேர்ச்சி. நேர்த்தி, நேர்ச்சை என்ற பெயர்களில் மக்கள் பயன்படுத்துகின்றனர். வழிபாடு என்ற செயலின் வளர்ச்சியே நேர்த்திக் கடனாக முடிவடைகிறது. மனிதன் தன்னுடைய தேவைகளை தெய்வத்திடம் வேண்டுகிறான். நினைத்தவாறு செயல்கள் வெற்றி பெற்றுவிட்டால் அதற்குரிய நன்றிக்கடனை செலுத்துவதாக வேண்டிக் கொண்டு நேர்த்திக்கடனைத் தெய்வத்திற்காகப் படைக்கிறான். ஒவ்வொரு கோவில்களிலும் ஒவ்வொரு விதமாக நேர்த்திக்கடன் (வழிபாடு) நடைபெறும், நகை, பணம், ஆடு, மாடு, கோழி விவசாயப் பொருட்கள் போன்றவற்றை நேர்த்திகடனாக இறைவனுக்கு செலுத்து-கின்றனர். கோவலன் தனக்கும் மாதவிக்கும் பிறந்த குழந்தைக்குத் தனது குலதெய்வமான “மணிமேகலா” தெய்வத்தின் பெயரைச் சூட்டினான் என்று சிலப்பதிகாரம் குறிப்பிட்டுள்ளது. இங்கு கோவலனின் உயிரைக் காத்த இறைப்பெயரைக் குறிப்பிட்டு கடன் தீர்த்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுவதை அறியமுடிகிறது.

**பொங்கல் வழிபாடு**

தமிழகத்தில் பொங்கல் என்று வழங்கப்படும் வழிபாடு கேரளாவில் பொங்கால என்ற பெயரில் பிரபலமாக நடைப்பெற்று வருகிறது. இந்த வழிபாடு கேரளத்திலுள்ள முக்கியமான கண்ணகி கோவில்களான உலகப்புகழ் பெற்ற திருவனந்தபுரம் ஆற்றுகால் தேவி, கொடுங்கல்லூர் பகவதி, பாலக்காடு கண்ணகி அம்மன், மூத்தான் தர பகவதி, சித்தூர் பகவதி, கொல்லம் பிஷாரிக்காவு, செங்கனூர் தேவி, திருவஞ்சைக்களம் காளி, மலையன்மார் ஒற்றை முலைச்சி, மலபார் கண்ணகி கோயில்களில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**ஆற்றுகால் பொங்கல் திருவிழா - பெண்களின் சபரிமலை**

கேரளத்தலைநகர் திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோவிலிலிருந்து 2.5 கி.மீ தொலைவில் ஆற்றுகால் தேவி கோவில் உள்ளது. இக்கோவிலில் நூற்றாண்டுகளாக நடைப்பெற்று வரும் பொங்கல் திருவிழா உலகப்புகழ் பெற்று விளங்குகிறது. முப்பது லட்சத்திற்கும் அதிகமான பெண்கள் இப்பொங்கல் வழிபாட்டில் கலந்து கொண்டனர். இதனால் ஆற்றுகால் பொங்கல் திருவிழா இரண்டு முறை கின்னஸில் இடம்பெற்றது. ஏழை. எளியவர், படித்தவர்கள், படிக்காதவர்கள், பெரும் வணிகக் குடும்பத்தினர், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் அரசியல்வாதிகள், திரைப்பட நடிகைகள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடில்லாமல் நாடு, இன, மொழி பேதமின்றி அனைவரும் ஒற்றுமையுடன் கலந்து கொள்கின்றனர். இப்பொங்கல் விழாவின் போது நகரமே விழாக்கோலம் பூண்டு காட்சியளிக்கும்.

நகரவீதியில் கோவிலிலிருந்து 20 கி.மீ சுற்றளவில் அனைத்து சாலைகள், வீடுகள், அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள், தனியார் நிறுவனங்கள், இரயில்வே நிலையம் என எங்குப்பார்த்தாலும் பெண்கள் கூட்டம் அலைமோதும் காட்சி ஓர் அதிசயக் காட்சியாகவே இருக்கும். பொங்கல் திருவிழாவிற்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் மற்றும் தங்கும் வசதிகளை அரசாங்கமும் சமூகநல அமைப்புகளும் செய்து கொடுக்கின்றதன. பொங்கல் அன்று திருவனந்தபுர மாவட்டத்திற்கு அரசு விடுமுறை அழிக்கிறது.

பொங்கல் நடைபெறும் தினம் காலை 10.15 மணிக்கு கோவிலிலுள்ள பண்டார அடுப்பில் தலைமைக் குருக்கள் தீபச்சுடர் ஏற்ற மற்ற பொங்கல் அடுப்புகளுக்கும் மாறி மாறி தீ மூட்டிவிடப்படும். ஒரே சமயம் முப்பது லட்சம் பெண்கள் பொங்கலிடுவார்கள். அப்போது கண்ணகி மதுரையை எரித்த போது உருவான தீ கோளம் போல் நகரமே புகை மண்டலமாகக் காட்சியளிக்கும். பொங்கலிடும் பெண்கள் தேவிக்குக் காணிக்கையாக வெள்ளைச்சோறு, சர்க்கரைப் பொங்கல, மண்டப்புற்று, திரளி போன்றவற்றை தயார் செய்வார்கள். பொங்கல் விழாவின் இறுதியில் சாந்திமார்கள் புனிதநீர் தெளிப்பதோடு அனைவரும் தங்களது வீடுகளுக்குச் செல்வர். இத்தகு சிறப்பு வாய்ந்த ஆற்றுகால் தேவி கோவிலின் தோற்றம் குறித்து பல்வேறு கதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### ஆற்றுகால் கோவிலின் தோற்றம் பற்றிய கதைகள்

அரசியின் சிலம்பைக் கோவலன் திருடிவிட்டதாக நினைத்து பாண்டிய மன்னன் மரண தண்டனை வழங்கினான். இதனை அறிந்த கண்ணகி தனது கணவன் கள்வன் அல்லன் என்று நிரூபித்து மதுரையை எரித்து சாம்பலாக்கி விட்டு சினத்துடன் கன்னியாகுமரி வழியே சேர தேசமான கொடுங்காலூருக்குப் பயணித்தாள். அப்போது வழியில் ஆற்றுகாலில் தங்கினாள். பிறகு சினம் தணிந்து சாந்த சொரூபினியாக அங்கேயே கோவில் கொண்டாள் என்கிறது ஸ்தல வரலாறு.

ஆற்றுகால் பகுதியில் பிரபலமான முள்ளுவீடு குடும்பத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் ஸ்ரீ பார்வதிதேவியின் தீவிர பக்தராம். ஒரு நாள் மாலை அவர் கிள்ளியாற்றில் நீராடிக்கொண்டிருந்தார். அப்போது சிறுமி ஒருத்தி நிறைய ஆபரணங்களைச் சூடி அழகுடன் ஜொலித்தப்படி அவர் எதிரே வந்தாள். என்னை அக்கரைக்குக் கொண்டுபோய் விடுகிறீர்களா? என்று கேட்டாள். உடனே முதியவரும் அவளைத் தனது தோள் மீது தூக்கிக்கொண்டு ஆற்றைக்கடந்தார். அக்கரையில் இறக்கி தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று அவளுக்கு உணவு பரிமாறினார். சாப்பிட்டு முடித்த சிறுமியைக் காணவில்லை. அச்சிறுமி அன்றிரவு முதியவரின் கனவில் தோன்றி நான் தான் பகவதி பார்வதியின் அம்சம் என்றும் அருகில் உள்ள தோப்பில் மூன்று கோடுகள் தென்படும் இடத்தில் எனக்கு ஒரு கோவில் கட்டுக என்றும் கூறினாள். அதன்படி விடிந்ததும் தோப்புக்குச் சென்ற முதியவர் அங்கே மூன்று கோடுகள் தெரிந்ததைக் கண்டு மெய்சிலிர்த்தார். பின்னர் அவளுக்கு அங்கே ஒரு கோவில் கட்டினார். இவ்வாறு ஆற்றுகால் கோவிலின் தோற்றம் குறித்து பல்வேறு கதைகள் கூறப்பட்டு வருகின்றன.

### ஆற்றுகால் தேவிகோவில் திருவிழாவின் முக்கியச்சடங்குகள்

கும்ப மாதம் (தமிழில் மாசிமாதம்), கார்த்திகை நட்சத்திரத்தில் 10 நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவின் முக்கியச்சடங்குகளாக காப்புகெட்டி குடியிருத்தல், தோற்றம்பாட்டு - பாண்டிய மன்னனது மரணம் வரையுள்ள பகுதிகள் இதில் பாடப்படும். பொங்கால சமர்ப்பணம் தாலப்பொலி (தாள மேளம்), குத்தியோட்டம் (13 வயது வரையிலான சிறுவர்களின் அலங்கார அணிவகுப்பு மஹிஷாசுரனை எதிர்த்துப் போரிட்ட அம்மனின் படை வீரர்களாக சிறுவர்களை கருதுவர்) அம்மா பவனி, குருதிதர்ப்பணம் முதலியவைகளாகும். இக்கோவிலில் நடைபெறும் பொங்காலாவின் பின்புலம் குறித்து பல்வேறு கதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## பொங்காலாவின் பின்புலம்

கிள்ளி நதிக்கரையில் உள்ள வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயப் பெண்கள் அங்கே அழகிய பெண்ணொருத்தி ஆற்றுநீரில் கால் நனைத்தப்படி கரையில் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். அவள் அந்தப் பெண்களிடம் சென்று பசிக்குது சாப்பிட ஏதாவது கொடுங்க என்று கேட்டாள். உடனே அந்தப் பெண்கள் வெட்டவெளியில் கற்களை அடுக்கி, அடுப்பு போலாக்கி தீ மூட்டி பானையில் அரிசி, வெல்லம் ஆகியவற்றை இட்டு சர்க்கரைப் பொங்கல் தயாரித்துக் கொடுத்தார்களாம். ஆசையுடன் வாங்கிச் சாப்பிட்ட அந்தப்பெண் சட்டென்று மறைந்தாள். அவளே கண்ணகி தேவி என்றும் அன்று அவளுக்கு வழங்கிய சர்க்கரைப் பொங்கலை நினைவுபடுத்தும் விதமாக தோன்றியதே பொங்காலா திருவிழா என்றும் கூறுகின்றனர்.

பார்வதிதேவியாக அவதரித்த தாட்சாயிணி தன்னுடைய கணவனை அடைவதற்காகச் செய்த தவத்தால் வாயுவை மட்டும் உணவாக உண்டு, ஒற்றைக்காலில் யோக நிலையில் நின்று சூரியனை வேண்டினாள். இதனால் பொங்கல் படைக்கவரும் பெண்களோடு ஒப்பிடப்படுகின்ற தன்மையைக் காணமுடிகிறது. மகிஷாசூரனை அழித்த பிறகு பக்தர்களின் முன் தோற்றம் கொள்ளும் அம்மனுக்குப் பொங்காலைப் படைத்து வரவேற்பதற்காக பொங்கால நடைபெறுகிறது.

மதுரையைத் தீக்கிரையாக்கிவிட்டு ஆற்றுகால் வந்த கண்ணகி அம்மனைச் சமாதானம் செய்து வரவேற்பதற்காகவும் இந்நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்று பரம்பரைக் கதைகள் வழக்கில் நிலவுகின்றன.

மதுரையை எரித்த கண்ணகி சொக்கன் வாசலில் நின்று நிலை தருக என வேண்டியதாகவும் அப்போது சொக்கர் ”நீதான் நிற்க இடமில்லாமல் மதுரையை எரித்து விட்டாயே” அதனால் இனிமேல் நீ ”மலையாள தேசமெல்லாம் பகவதியாய் போயிரென்றார் பாக்கமடிச் சீமையெல்லாம் பாராண்டு நியிரடி” என்று வரம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

கண்ணகி மதுரைத் தெற்குக் கோட்டை வாசல்விட்டு சிக்கந்தர் மலைகடந்து சாத்தூர் சங்கர நாயினார் கோயில், குற்றாலம் ஆகிய இடங்களைக் கடந்து ஆரியங்காவை அடைகிறாள். அங்கே மாகாளியின் உருவங்கொண்டு மனிதரைப் பிடிக்கலுற்றாள். அதைக்கண்ட அப்பிரதேசத்து மன்னன் காளியுடைய கோயிலுக்குக் களியூட்டு நடத்தினார். இவ்வாறு சுற்றிலுமுள்ள தேவதைக்கு ஊட்டுப் போட்டுக் கொடுக்கப் பட்டிகளில் பொங்கல் இடச் சொன்னாள் என்று ஒரு சுவடிகதை உள்ளது.

## முடிவுரை

மனித சமுதாயத்தில் அச்சம், போராட்டம் போன்றவை தெய்வச்சிந்தனைக்கு வழிவகுத்தது. மனிதன் தன்னுடைய தேவைகளைத் தெய்வத்திடம் வேண்டுகிறான்.நினைத்தவாறு செயல்கள் வெற்றி பெற்றுவிட்டால் அதற்குரிய நன்றிக்கடனாக இறைவனுக்கு வழிபாடு செய்து மனநிறைவு அடைகிறான். இந்த வழிபாட்டு முறைகளில் ஒன்றுதான் பொங்கல் வழிபாடு. இந்த வகையில் கேரளாவில் மிகவும் பிரசித்திப்பெற்று விளங்கும் ஆற்றுகால் தேவி கோவில் பொங்காலாவின் வரலாற்றுப் பின்னணியை மேற்கூறிய கருத்துக்களிலிருந்து அறியமுடிகிறது.

## பார்வை நூல்கள்

அமுதன், வெ. சிறு தெய்வ திருவிழாக்கள், தஞ்சாவூர், 2009.

கலைக்களஞ்சியம், தொகுதி-2, தொகுதி-8, 2000.

சண்முகசுந்தரம் சு., நாட்டுபுறத் தெய்வங்கள், 1999.

சந்திரன், கு. மதுரை மாவட்ட நாட்டுபுறத் தெய்வங்கள், சென்னை, 2005.

சரளா இராசகோபாலன், கண்ணகி வழிபாடும் மாரியம்மன் வழிபாடும், 2001.

## To cite this article

*****************

Manickaraj, K. (2022). பொங்கல் ஒரு வரலாற்றுப் பின்னணி. *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 5*(4), 10-15.

******************************************************************************************

## ABOUT THE AUTHOR



*__Dr K.Manickaraj__ is working as an Associate Professor and Head, Department of Tamil, Government College for Women, Thiruvananthapuram, Kerala. He got a Ph.D from Kerala University on the Topic Tamil Malayalam Childrens literature -A Comparative Study. He has published two books and fifteen articles in various journals in that nine articles are published in UGC Referred journals. He also participated and conducted various national and international seminars.*

******************************************************************************************